மையக் கிராம வளர்ச்சி நிலையங்கள்

* 68 வினா—**திரு. கரு. சீமைச்சாமி :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை, இராமநாதபுர மாவட்டங்களில் எத்தனை கேந்திர கிராம விஸ்தரிப்பு நிலையங்கள் உள்ளன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மதுரை மாவட்டத்தில் 12 மையக் கிராமக் கால்நடை வளர்ச்சி நிலையங்களும் Key Village Extension Centres இராமநாதபுரம் மாவட்டத்தில் 7 நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, இந்த கேந்திர கிராம விஸ்தரிப்பு நிலையங்களின் வேலைத் திட்டங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 5,000 பசுக்கள் இருக்கிற இடத்தில், 50 காளைகளை தனிப்பட்டவர்களிடத்தில் வழங்கி, கருத்தரிப்பதற்கு விவசாயிகள் கட்டணம் ஏதும் செலுத்தாத முறையில் செயலாக்கப்பட்டு வருகிறது.

திரு. மா. இராசாங்கம் : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் கேந்திர கிராம விஸ்தரிப்புகள் 12 என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவைகள் எந்தெந்த இடங்களில் இருக்கின்றன என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : உத்தமபாளையம், விராம்பட்டி, திருமங்கலம், சாணார்பட்டி, கோம்பை, சிலுவாத்தூர், கம்பம், ராசிங்கபுரம், சிபலக்கோட்டை, கல்லாந்திரி, வீரபாண்டி, நத்தம்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : தலைவர் அவர்களே, முன்பு கொடுத்த பொலிகாளைகளெல்லாம் நடப்பதற்கே திண்டாடிக் கொண்டிருக்கின்றனவே, அதைப்பற்றி அரசாங்கம் கவனிக்குமா ? அதைப்பற்றி மறுபரிசீலனை செய்து நல்ல காளைகளைக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : முன்னூறு பசுக்களுக்கு அது சர்வீஸாகி இருந்தால் யாரிடத்தில் வழங்கினோமோ அவருக்கே இலவசமாகக் கொடுத்து விடுகிறோம். நடக்க சக்தி யில்லாத மாடுகளை அவர்களுக்கே இலவசமாகக் கொடுத்து விடுகிறோம். அப்படி எந்த எந்த இடத்தில் இருக்கின்றன என்ற தகவல் கொடுத்தால் சர்க்கார் பரிசீலித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, பிரசித்தி பெற்ற காங்கேயம் இனம் உற்பத்தியாகும் இடங்களில் இந்த செயற்கைக் கருத்தரிப்பு முறை மூலம் தர்பார்க்கார் இனத்தைக் கலப்பு செய்வதை விவசாயிகள் எதிர்ப்பதால் பழைய காங்கேய இனத்தையே செயற்கைக் கருத்தரிப்பு நிலையங்களில் புகுத்த சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

1967 ஜூன் 24]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நேற்று முன் தினம் கேட்ட அங்கத்தினருக்குப் பதில் அளிக்கும் முறையில் சொன்னேன். மத்திய சர்க்கார் நிதியிலிருந்து செயல்படுகிற இந்த செயற்கை கருத் தரிக்கும் திட்டத்தில் எதை உபயோகிக்க வேண்டும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். காங்கேயத்தை அன்னியில் வேறு இனத்தை சர்வீசுக்கு உபயோகப்படுத்த வேண்டியிருக்கிறது.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது இராமநாதபுரத்தில் உள்ள கேந்திர கிராம விஸ்தரிப்புக் திட்டத்தைப்பற்றிச் சொன்னார்களே மற்ற மாவட்டங்களில் இருக்கக்கூடியதைப் பற்றிய தகவல் அமைச்சரிடத்தில் இருந்தால் சொல்லுவார்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :

செங்கற்பட்டு	4
வட ஆற்காடு	7
தென் ஆற்காடு	5
தஞ்சாவூர்	4
திருச்சிராப்பள்ளி	10
மதுரை	12
இராமநாதபுரம்	7
திருநெல்வேலி	9
கன்னியாகுமரி	1
சேலம்	13
கோயம்புத்தூர்	1
நீலகிரி	
சென்னை	

ஆக, 73 இடங்களில் நிலையங்கள் இருந்து வருகின்றன.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இந்த கீ வில்லேஜ் சென்டர்களில் காங்கேயம் மட்டும் கலப்பதிலே அவைகள் பார வண்டி இழுப்பதற்கு மட்டும்தான் பயன்படும். கீ வில்லேஜ் சென்டரின் அடிப்படை நோக்கம் அவைகள் பால் அபிவிருத்தி செய்வதற்கும் பயன்பட வேண்டும், வேலை செய்வதற்கும் பயன்பட வேண்டும், 'டூயல் பர்பஸுக்கு' பயன்படவேண்டும். இரு வேலைகளுக்கும் பயன்படவேண்டும். ஆகவே, எல்லா கீ வில்லேஜ் சென்டரும் இம் மாதிரி முறையில் விஸ்தரிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : காங்கேயம் கடுமையான வேலை செய்வதற்கு உபயோகமாக இருக்கும். சிந்து, முர்ரா, தர்பார்கார், ஹலிக்கார் இவை பால்வளம் பெருக உபயோகமாக இருக்கும். இரண்டு பர்பசுக்கும் உபயோகப்பட வேண்டுமென்றால், அது மாதிரியான யோசனையைக் கொடுத்தால் அதைப்பற்றி பரிசீலிக்கப்படும்.

[1967 ஜூன் 24

திரு. எஸ். ஆறுமுகம் : காங்கேயம் காளையை சர்வீஸுக்காக நாம் வாங்கிக் கொடுக்கிறோம். ஆறு மாத காலம் ஆகவிட்டால், அந்தக் காளைகள் சரியான முறையில் சர்வீசுக்குப் பயன்படுவதில்லை. ஆகவே, இதை மாற்றி, முர்ரா போன்ற காளைகளை வாங்கிக் கொடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : முர்ரா எருமை. (சிரிப்பு) காங்கேயம் காளை சரியாகப் பயன்படவில்லை என்றால், அதை யாரிடம் கொடுத்திருக்கிறோமோ அவர் அதற்குச் சரியான தீவனம் போடாமல் இருந்திருக்கலாம். அதனால் அது வேலை செய்யாமல் இருக்கலாம்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : செயற்கை கருத்தரிக்கும் நிலையங்களில் சில சமயங்களில் காங்கேயம் மாடுகளுக்கும் சிந்துக் காளையின் விந்துகளை செலுத்துவதினால், பிறக்கும் மாடுகள் அநேகமாக ஜாதி மாறி பிறப்பதினால், ஒன்றுக்கும் லாயக்கில்லாமல் போய்விடுகிறது. காங்கேயம் மாட்டுக்கு சிந்துக் காளை போடுவதினால், மாடாகப் பிறந்தாலும் பரவாயில்லை, காளையாகப் பிறப்பதினால் பிரயோசனம் இல்லாமல் போய்விடுகிறது. இதைக் கவனித்து ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஒட்டுமொத்தமாகக் குற்றம் சாட்டுவதிலே பிரயோசனமில்லை. எந்த கேந்திர நிலையங்களில் அந்த முறை கையாளப்படுகிறது என்ற தகவல் கொடுத்தால், வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வ. ஜார்ஜ் : கேந்திர கிராம விஸ்தரிப்பு நிலையங்களில் வெள்ளைப் பன்றி வளர்ப்பதற்கு ஏதேனும் அரசாங்கத்தினிடம் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : வெள்ளைப்பன்றி பற்றிய பிரச்சினை இப்போழுதில்லை. இது மாடுகளைப் பற்றிய பிரச்சினை.

இராமநாதபுரத்தில் கால்நடை கல்லூரி துவக்கம்

* 69 **வினு—திரு. கரு. சீமைச்சாமி**: மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரத்தில் ஒரு கால் நடை கல்லூரி (Veterinary College) ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் என்றால், அது எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லை.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : கால் நடை மருத்துவக் கல்லூரிகள் நம் மாநிலத்தில் எந்தெந்த இடங்களில் இருக்கின்றன ? வேறு எந்த இடங்களிலாவது அமைப்பதற்கு சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?